கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.12.2023) முகாம் அலுவலகத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு மாநில உரிமை மீட்பு முழக்கமாக சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதியன்று நடைபெறவுள்ளதையொட்டி அம்மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றார். உடன் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்களை நேற்று முன்தினம் (1.12.2023) அவரது இல்லத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு மாநில உரிமை மீட்பு முழக்கமாக சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதியன்று நடைபெறவுள்ளதையொட்டி அம்மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றார். உடன் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

அதிகாரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படும்

எல்லை மீறிய அதிகாரங்கள் அழிவைத் தரும்!

ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கருத்து!

சென்னை, டிச.3-

"அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்கள் அந்த நிறுவனங்களையே அழித்துவிடும்" என்று மதுரையில் அமலாக்கத்துறை அதிகாரி லஞ்ச வழக்கில் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி அனில்ஸ்வரப் தமது ட்விட்டர் பதிவில் கருத்து தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசின் மதுரை அமலாக்கத் துறை அலுவலகத்தில் அலுவலராகப் (Enforcement Officer) பணி புரிந்து வரும் அங்கித் திவாரி (Ankit Tiwari) என்பவர் கடந்த 29.10.2023 அன்று திண்டுக்கல்லைச் சேர்ந்த அரசு ஊழியர் ஒருவரை தொடர்பு கொண்டு அவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் பதிவு செய்யப்பட்டு முடிந்து போன வழக்கை சுட்டிக்காட்டி, அவ்வழக்கில் அமலாக்கத் துறை விசாரணை நடத்த வேண்டுமென பிரதமர் அலுவலகத்திலிருந்து உத்தரவு வந்துள்ளதாகவும். 30.10.2023 அன்று மதுரை அமலாக்கத் துறை அலுவலகத்திற்கு விசாரணைக்கு வரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

வாட்ஸ்அப் – குறுஞ்செய்திகள் மூலம் மிரட்டல்!

அதன்படி, அந்த அரசு ஊழியர் மதுரைக்குச் சென்றபோது. அங்கித் திவாரி. அரசு ஊழியரின் காரிலேயே ஏறிக் கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருக்க ரூ.3 கோடி தரவேண்டும் என்றும். பின்னர் தனது உயரதிகாரிகளோடு பேசுவதாகத் தெரிவித்துவிட்டு இறுதியாக ரூ.51 லட்சம் தரவேண்டும் என்றும் பேரம் பேசி உள்ளார்.

கடந்த 01.11.2023 அன்று அரசு ஊழியர் முதல் தவணையாக ரூ.20 லட்சம் பணத்தை அவரிடம் வழங்கி உள்ளார். பின்னர். மேல் அதிகாரிகளுக்கும் பங்கு தர வேண்டி உள்ளதால் பேசியபடி முழுத்தொகையான ரூ.51 லட்சத்தையும் தரவேண்டும் என்றும். இல்லையென்றால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் தொடர்ந்து வாட்ஸ்அப் மூலமும். குறுஞ் செய்திகள் மூலமும் மிரட்டியுள்ளார்.

இவரது நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த அந்த அரசு ஊழியர் 30.11.2023 அன்று திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் புகார் அளித்தார்.

முதற்கட்ட விசாரணையில் அங்கித் திவாரி அமலாக்கத் துறை அதிகாரி என்றும். தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அரசு ஊழியரை மிரட்டி பணம் வசூலித்துள்ளார் என்றும் தெரிய வந்ததால் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு இரண்டாவது தவணையாக 01.12.2023 அன்று காலை 10.30 மணியளவில் ரூ.20 லட்சம் லஞ்சப்பணத்தைப் பெற்றுக் கொண்டபோது அவர் கையும். களவுமாகப் பிடிபட்டார்.

சோதனையின்போது முக்கிய ஆவணங்கள் சிக்கின!

அதனைத் தொடர்ந்து அங்கித் திவாரியின் வீடு மற்றும் மதுரையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகம் ஆகியவற்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இச்சோதனையின்போது இவருக்குத் தொடர்புடைய பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

மேலும் இவர் அமலாக்கத்துறையின் பெயரில் எவரேனும் மிரட்டியோ அல்லது அச்சுறுத்தியோ இதேபோன்ற யுக்தியைப் பயன்படுத்தி கோடிக்கணக்கில் பணம் பெற்றுள்ளாரா என்ற கோணத்திலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த குற்ற நிகழ்வில் பிற அமலாக்கத் துறை அலுவலர்களுக்குத் தொடர்புள்ளதா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வழக்கு விசாரணையின் தொடர்ச்சியாக அங்கித் திவாரிக்கு தொடர்புடைய இதர இடங்களிலும் சோதனைகள் மேற்கொள்ள லஞ்ச ஒழிப்புத்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுகுறித்து ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அனில்ஸ்வரப் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:-

நிறுவனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்கள் அந்த நிறுவனங்களையே அழித்து விடும்.

நிறுவனங்களை அரசியல் ரீதியாக பழிதீர்க்க பயன்படுத்தும் போது அது நிலைமையை இன்னும் மோசமாக்கும். இந்த நிலைமை கைவிட்டுப் போவதற்குள் சம் பந்தப்பட்டவர்கள் இதுகுறித்து தீவிரமாக ஆலோசிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 27 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - டாக்டர் வை.முத்துராஜா - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ.3-

கழக இளைஞர் அணி செயலாளர்இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு, நவம்பர் 27ந் தேதி புதுக்கோட்டை அரசு இராணியார் மருத்துவமனையில் பிறந்த 27 குழந்தைகளுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மாநில இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையன், க.மதியழகன், நகர கழக செயலாளர் ஆ.செந்தில், ஒன்றிய செயலாளர்கள் தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் சி.ஆர்.வி.சித்ரா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அ.ரெத்தினம், எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, வி.என்.எம்.பாலமுருகன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், சி.அரங்கநாயகம், வே.ராஜேஷ், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், க.கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், பெ.தெய்வானை, ஆர்.ரெத்தினசபாபதி, கி.சுப்ரமணியன், ஞானசேகரன், பிரபு கேண்டின் பன்னீர், வெங்கடேசன், கலையரசன், பழனித்துரை, வட்ட கழக செயலாளர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் ராமச்சந்திரன், பழனிவேல், பால்ராஜ், ராஜராஜன், ராஜாராம், திருப்பதி, சே.சரவணன், ஆர்.சி.எம்.தினேஷ், ஆதி, பிச்சை உள்ளிட்ட கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

சென்னை உயர்நீதிமன்ற

கழக வழக்கறிஞர் ஹேமந்த் அண்ணாதுரை திருமண வரவேற்பு விழா!

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. - முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, டிச.3-

சென்னை உயர்நீதிமன்ற கழக வழக்கறிஞர் ஹேமந்த் அண்ணாதுரையின் திருமண வரவேற்பு விழா, இன்று நடைபெறுகிறது.

இவ்விழாவில் கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

கழக முன்னோடி எம்.எஸ். அண்ணாதுரை -திருமதி எம்.ஏ. சாவித்திரி ஆகியோரின் புதல்வரும் சென்னை உயர்நீதிமன்ற கழக வழக்கறிஞரும், சென்னை கிழக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி முன்னாள் அமைப்பாளருமான ஹேமந்த் குமார் (என்ற) ஹேமந்த் அண்ணாதுரை - கே.பாண்டியன் - திருமதி பி.சரஸ்வதி ஆகியோரின் புதல்வி பி.சரவண பிரியா (என்ற) சஞ்சனா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (3.12.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 7 மணி அளவில், சென்னை - இராஜா அண்ணாமலைபுரம் - எம்.ஆர்.சி.நகரில் அமைந்துள்ள, மேயர் இராமநாதன் செட்டியார் சென்டர், வள்ளியம்மை ஹாலில் நடைபெறுகிறது.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் - கழக முன்னணியினர், நிர்வாகிகள், தோழர்கள், வழக்கறிஞர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

திண்டுக்கல் டாக்டரிடம் ரூ20 லட்சம் லஞ்சம்! கையும் களவுமாக சிக்கிய

அமலாக்கத்துறை அதிகாரி அதிரடி கைது!

திண்டுக்கல், டிச. 3-

திண்டுக்கல்லில் டாக்டர் ஒருவரிடம் வழக்கை முடித்து தருவதாக கூறி ரூ20 லட்சம் லஞ்சம் பெற்ற அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி என்பவரை லஞ்ச ஒழிப்புப் போலீசார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் இந்நாள் முன்னாள் அமைச்சர்கள், தொழிலதிபர்கள், ஒப்பந்ததாரர்கள் வீடுகள், அலுவலகங்களில் பல்வேறு வழக்குகளின் கீழ் அமலாக்கத்துறை அதிகாரிகள் குழு சோதனை நடத்தினர்.

அண்மையில் அமலாக்கத் துறை அதிகாரிகள், மணல் குவாரி விவகாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சம்மன் அனுப்பி இருந்தனர். இதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. இதே போல திண்டுக்கல் மாவட்டத்திலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் தொழிலதிபர் ரத்தினம் உள்ளிட்டோர் வீடுகளில் அடுத்தடுத்து சோதனை நடத்தி இருந்தனர். தற்போது மணல் விவகாரத்தில் தொழிலதிபர் ரத்தினம் தலைமறைவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டத்தில் அமலாக்கத்துறை அதிகாரிகள் என்ற பெயரில் தொழிலதிபர்கள் உள்ளிட்டோரை மிரட்டி பணம் பறிப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. திண்டுக்கல்லைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தம்மிடம் பணம் பறித்த அமலாக்கத்துறை அதிகாரி குறித்தும் தகவல் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் திண்டுக்கல் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் வாகன சோதனை நடத்திய போது சந்தேகத்துக்கு உரிய நபர் ஒருவரை போலீசார் தடுத்து நிறுத்தினர். அந்த நபரின் வாகனத்தை சோதனையிட்ட போது கட்டுக்கட்டாக ரூ20 லட்சம் பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பிடிபட்ட நபரிடம் விசாரணை நடத்தினர் போலீசார். இந்த விசாரணையில்தான் திண்டுக்கல் டாக்டர் புகார் கொடுத்த அமலாக்கத்துறை அங்கித் திவாரி தான் சிக்கியவர் என தெரிய வந்தது. திண்டுக்கல்லை சேர்ந்த அந்த டாக்டர் மீது அமலாக்கத்துறை வழக்கு பதிவு செய்துள்ளது. இந்த வழக்கை முடித்து வைப்பதற்காக டாக்டரிடம் ரூ20 லட்சம் பெற்றதாகவும் கையும் களவுமாக சிக்கிய அங்கித் திவாரி ஒப்புக் கொண்டிருக்கிறார். இதனையடுத்து அவரது காரில் இருந்த ரூ20 லட்சம் லஞ்சப் பணத்துடன் அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் யார் யாரிடம் மிரட்டி லஞ்சம் பெறப்பட்டது என்பது குறித்தும் அங்கித் திவாரியிடம் லஞ்ச ஒழிப்புப் போலீசார் கிடுக்குப்பிடி விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிதம்பரம் நடராஜர் திருக்கோயில் புதிய கட்டிடங்கள்:

உயர் நீதிமன்றத்தில் தீட்சிதர்கள் உத்தரவாதம்!

சென்னை, டிச.3-

கடலூர் மாவட்டம், சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலில் உயர்நீதிமன்ற உத்தரவின்படி வல்லுநர் குழு மற்றும் ஆணையர் அனுமதி பெறாமல் பழமையான கட்டிடங்களை அகற்றி புதிய கட்டிடங்கள் பொது தீட்சிதர்களால் கட்டப்படுவதை தடை செய்ய வேண்டும் என இந்து சமய அற நிலையத்துறை ஆணையரால் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்கண்ட மனு நீதியரசர்கள் ஆர்.மகாதேவன் மற்றும் பி.டி.ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு நேற்று முன்தினம் (01.12.2023) வரப் பெற்றது.

விசாரணையின்போது அரசு தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர். ஆர்.அருண் நடராஜன், அனுமதியின்றி கட்டப்பட்டுவரும் கட்டுமானங்கள் குறித்த புகைப் படங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இதற்கு பொது தீட்சிதர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் மேற் கொண்டு கட்டு மானப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படாது என உத்தரவாதம் அளித்ததை பதிவு செய்து கொண்டு வழக்கின் விசாரணையை எதிர் வரும் 06.12.2023 (புதன்கிழமை) தேதிக்கு ஒத்திவைத்தனர்.

மானாமதுரையில் ரூபாய் 1 கோடியே 50 லட்சத்தில்

புதிய அரசு ஆரம்ப சுகாதார மைய கட்டிடப் பணிகள்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 3-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் சார்பில் ரூபாய் 1கோடியே 20 லட்சத்திலும் ரூபாய் 30 லட்சத்தில் துணை சுகாதார மைய கட்டிடப் பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் ஒரு கோடியே 50 லட்சம் மதிப்பிலான புதிய ஆரம்ப சுகாதார மையத்திற்கான கட்டிடப் பணிகளை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மானா மதுரை கோட்டாட்சியர் திருமதி சுகிர்தா நகர்மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி துணைத் தலைவர் பாலசுந்தரம், ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை துணை தலைவர் முத்துசாமி, நகர்மன்ற உறுப்பினர் பாலாஜி, வட்டாட்சியர் ராஜா மானாமதுரை நகர் கழக செயலாளர் க. பொன்னுச் சாமி ஒன்றிய செயலாளர்கள் துரை.ராஜாமணி, எம். அண்ணாத் துரை,

ஒன்றிய நகர், கழக நிர்வாகிகள் ரவிச்சந்திரன், மாணவர் அணி கார்த்தி, இளைஞரணி பொ.அதியமான், ராஜேஷ்குமார், மாரிக் கண்ணன், ரவி, மயில் வாகனன், மூர்த்தி, பாஸ்கரன், சண்முகம், வேல்முருகன் மகளிர் அணி சண்முகப்பிரியா, மன்னர் மன்னன், அழகு சுந்தரம், மலைச்சாமி, சேகர், பாலகிருஷ்ணன், நெசவாளர் அணி பால்பாண்டி, பா. சுரேந்திரன் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் பொதுக்குழு உறுப்பினர் ஜெயமூர்த்தி உட்பட நகர ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டம் பெத்தநாய்க்கன் பாளையத்தில் மாநில தி.மு.க இளைஞரணியின் 2வது மாநாடு டிச.17ல் நடைபெறுவதையொட்டி பந்தல் திடல் அமைக்கும் பணி நடை பெற்று வருவதை கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம். ஆகியோர் பார்வையிட்டனர். உடன் சேலம் மாவட்ட தி.மு.க. செயலாளர்கள். எஸ்.ஆர். சிவலிங்கம் (கிழக்கு) இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. (மத்திய மாவட்டம்) டி.எம்.செல்வகணபதி (மேற்கு) எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி. கிழக்கு மாவட்ட துணைச்செயலாளர்கள். க சுரேஷ்குமார். கு.சின்னதுரை, ஏ.ஏ.ஆறுமுகம், பூலாவரி எஸ்.சேகர் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.